| Headline | Health Ministry continues fight against HIV | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 14 Jul 2016 | Color | Full Color |
| Section | News | Circulation | 28,000 |
| Page No | 2 | Readership | 180,000 |
| Language | Tamil | ArticleSize | 126 cm² |
| Journalist | N/A | AdValue | RM 733 |
| Frequency | Daily | PR Value | RM 2,199 |



# வரைமுறையற்ற பாலினச் சேர்க்கையில் ஈடுபடுவோருக்கு எயிட்ஸ் பரவுவதைத் தடுக்க சுகாதார அமைச்சு முனைப்பு! - சுப்ரா



கோலாலம்பூர், ஜூலை 14–

மலேசியாவில் வரைமுறையற்ற பாலினச் சேர்க்கையில் ஈடுபடுவோர் மத்தியில் எச்.ஐ.வி. / எயிட்ஸ் நோய் பரவுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் சுகாதார அமைச்சு முனைப்புக் காட்டும் என்று சுகாதார அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இந்நோய் பரவுவதில் பாலியல் தொழிலாளர்கள் 0 விழுக்காட்டுப் பங்கினை வகிக்கின்றனர். பாலியல் தொழிலாளர்களிடமிருந்து இந்த நோய் தொற்றும் நபர்கள் தங்கள் இணையருக்கு இந்நோய் பரவுவதற்குக் காரணமாக இருக்கின்றனர். இதன் மூலம் இந்நோய் மற்றவர்களுக்குப் பரவுகிறது.

இதற்கு முன்னர் போதைப் பித்தர்களின் மூலம் இந்நோய் பரவுவதைக் கண்டறிந்து அதனைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலவச ஊசிகளை வழங்குவதன் மூலம் அந்த அபாயம் சற்று தடுக்கப்பட்டது. ஆனால் முறையான பாதுகாப்பின்றி பாலியல் தொழிலாளர்களிடம் உறவு வைத்துக் கொள்வதால் இந்நோய் பரவலாகத் தொற்றுகிறது என்று அவர் நேற்று செய்தியாளர்களிடம் கூறினார். இதனைத் தடுக்க அரசு சார்பற்ற இயக்கங்களுடன் இணைந்து சுகாதார அமைச்சு முழு முயற்சியில் ஈடுபடும்.

நாட்டில் சுமார் 40,000 பாலியல் தொழிலாளிகளும் 20,000 திருநங்கைகளும், 170,000 ஓரினச் சேர்க்கையாளர்களும், ஊசி மூலம் போதைப் பொருளை உடலுக்குள் செலுத்தும் 170,000 போதைப் பித்தர்களும் இப்போது மலேசியாவில் உள்ளனர். இவர்கள் மூலம் எயிட்ஸ் பரவும் அபாயம் அதிகமாக உள்ளது என்றார் அவர்.

Powered by: isentia